# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.53/2023 |
| Miscellaneous | : | . |
| Preliminary Register | : | . |
| Deposition of Witness for | : | . |
| Prosecution | : | . |
| Defence | : | புகார்தாரர். |
| Name | : | . மூர்த்தி |
| Father’s Name | : | . கோவிந்தசாமி |
| Village | : | .பாஞ்சரை கிராமம் |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | .70 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 29.10.2025.

**1 முதல் 6 எதிரிகள் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். வயது முதிர்வு மற்றும் திறனாளி காரணமாக வேலைக்கு செல்லவில்லை. 22.4.2023ம் தேதி காலை 6.00 மணிக்கு வீட்டில் படுத்து இருந்தேன். என் மனைவியும் மாற்றுதிறனாளி ஆவார். அவரை வாசலில் தண்ணீர் தெளிக்க சொன்னேன். ஆஜர் எதிரிகள் எனது வீட்டில் இருந்து 4 வீடு தள்ளி குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் என் வீட்டிற்கு வந்து என்னை அடித்தார்கள். 1ம் எதிரி என்னை சுவர் ஏறி குதித்து வந்து என்னை அடித்தார். பின்னர் 1 முதல் 3 எதிரிகள் என்னை பாத்ரூமில் வைத்து அடித்தார்கள். 3ம் எதிரி என்னை துடப்பத்தால் அடித்தார் அசிங்கமாக

பேசினார்கள். பின்னர் எனது மனைவியை 3 முதல் 5 எதிரிகள் எனது மனைவியை அடித்தார்கள். யாரும் தடுக்கவில்லை. எனக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலத்தகராறு இருந்து வருகிறது. அதன் பிறகு என்னை நிலத்திற்குள் செல்லவிடாமல் செய்தார்கள். அதன்பிறகு என் தம்பி என்னை வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். போலிசார் வந்து வாக்குமூலம் வாங்கவில்லை.

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.